(இ) 1967–68-ம் ஆண்டு செப்டம்பர் வரை இக் கல்லூரியின் மொத்த வரவு செலவு விவரங்கள் வருமாறு :—

	ரூபாய்.
வரவு	2,38,894·51
செலவு	63,324·82

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : அங்கு பணிபுரியும் டீச்சிங் ஸ்டாப்பு களுக்கு சம்பளம் தரப்படவில்லை என்பது போன்ற பல புகார்கள் தெரிவிக் கப்படுகிறதே, அவை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. குறைபாடுகள் எழுதப்பட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : கீழ்திசைக் கல்லூரியில் கற்றுக் கொடுக்கிற பாட திட்டங்களின் விவரம் என்ன என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். கணேசன் : கிழ்த்திசைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெறுகிற மாணவர்களுக்கு எதிர்காலத்தில் எந்த விதமான வேலை வாய்ப் பும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதைக் கலைக் கல்லூரி யாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறதா, அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கல்லூரி அண்மை யில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் படித்துப் பட்டம் பெற்று மாணவர்கள் வெளியே வந்து வேலை கிடைக்கிறதா, இல்லை திண்டாடும் நிலை இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. இருந்தும் இதில் கலைக் கல்லூரியும் சேர்க்கப்படவேண்டுமென்ற கோரிக்கை இருக் கிறது. இந்தக் கல்லூரிக்கு உதவி செய்கிற தேவாலயங்கள், மடங்கள் இங்கிருந்தும் இதற்கு உதவி தருவதாக வாக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர் பரிசீலித்து வருகிருர். அதற்கு வழிவகை இருக்குமானுல் முடிவு எடுக்கப்படும்.

பள்ளம்பாறையில் சிமெண்டு தொழிற்சாலை.

***127 வினு.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள சாத்தான்குளம் அருகில் பள்ளம் பாறை கிராமப் பகுதியில் சிமெண்ட் தயாரிப்புக்கான மூலப் பொருள்கள் ஏராளமாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அங்கே ஒரு சிமெண்ட் ஆலை நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலுகாவிலுள்ள பள்ளம்பாறை சாத்தான் குளம் ஆகிய பிரதேசங்களில் ஏராளமான கங்கார் ரக சுண்ணும்புக் கற்படி வங்கள் இருக்கின்றன. அவற்றின் அளவு 7·7 மில்லியன் டன்கள் என மதிப்பிடப்படுகிறது. அரசாங்க புவி அமைப்பு இயல் ஆராய்ச்சி இலாகா செய்த பரிசோதனைகள் மூலம் இவை குறைந்த பட்ச சுண்ணும்புச் சத்தும் அதிகப் பட்ச மணற்கலப்பும் கொண்டவை எனத் தெரிகிறது. இவை சிமெண்ட் செய்ய ஏற்றவையல்ல.

(உ) அதுமாதிரி உத்தேசம் எதுவும் இல்லை.

1968 ஆகஸ்ட் 24]

திரு. டி. மார்டின் : திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு இந்த ஆராய்ச்சியை நடத்தினார்களா ? அதற்கு முன்பே நடத்தப் பட்ட ஆராய்ச்சியை வைத்து இந்தப் பதிலைக் கூறினார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆராய்ச்சி என்பது நீண்ட நெடுங்காலமாக நடைபெற்று வருவது. புதையியல் ஆராய்ச்சி நீண்ட நெடுங்காலமாக பிரிட்டிஷ் காலத்தில் இருந்து நடைபெற்று வருகிறது. அந்தப் பகுதியில் சுண்ணாம்புக்கல் கிடைத்தாலும், அதில் மணற்சத்து அதிகமாக இருப்பதனால் அதை வைத்து சிமெண்டு செய்கிற தொழிற்சாலை யைத் துவக்க முடியாது என்பதான ஆராய்ச்சி முன்பு இருந்தே செய்யப் பட்டு வந்திருப்பதுதான். அரசியல் வாதிகள் ஆராய்ச்சி செய்ய முடியாது. ஆராய்ச்சி வல்லுநர்கள்தான் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : சிமெண்டு தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்கள் தமிழ்நாட்டில் எந்த எந்த இடங்களில் கிடைக்கிறது என்கிற ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா ? எந்த எந்த இடங்களில் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது 7 இடங்களிலே பெரிய அளவில் சிமெண்டுத் தொழிற்சாலைக்குத் தேவையான அளவு சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன. திருநெல்வேலியில் சங்கரிநகர், சேலத்தில் சங்கரிதுர்க்கம், திருச்சியில் டால்மியாபுரம், கோயம்பத்தூரில் மதுக்கரை, இராமநாதபுரத்தில் ராஜபாளையம், திருச்சி கரூர் பக்கத்தில் இருக்கிற பகுதி, இராமநாதபுரத்தைச் சேர்ந்த சோழபுரம் முதலியன. இவை தவிர சிறிய அளவில் கிடைக்கிற 9 இடங்களில் சிறிய சிமெண்டு தொழிற்சாலை வைக்கலாம் என்று ஆராயப்பட்டிருக்கிறது. நான்கு இடங்களில் வைக்க முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிக்கிறபோது அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படா திருக்க அரசாங்கம் கவனம் செலுத்துகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிமெண்டு தொழிற்சாலை அமைகிற இடம் பெரும்பாலும் பாறையும், கரடுமாக உள்ள சுண்ணாம் புக்கல் கிடைக்கிற பகுதிதான். அங்கே போய்ப் பார்த்தால் பாறைகளை வெட்டி சுரங்கமாக அமைத்து சுண்ணாம்புக் கல் எடுப்பதைப் பார்க்கலாம். இதுபோன்ற பாறைப் பகுதிகளில், கரடுமுரடான பகுதிகளில் விவசாயம் நடப்பதாகத் தெரியவில்லை. ஆகவே பாதிப்பது பற்றி எழவில்லை.

திரு. கே. போஜன் : தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் சிமெண்டு தொழிற்சாலைகள் மொத்தம் எவ்வளவு டன் உற்பத்தியாகின்றது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருநெல்வேலி சங்கரி நகரில் 4,62,680 டன்கள். சேலம் சங்கரிதுர்க்கத்தில் 3,67,620 டன்கள், திருச்சி டால்மியாபுரத்தில் 4,41,960 டன்கள். கோயம்புத்தூர் மதுக் கரையில் 4,01,910 டன்கள். இராமநாதபுரம் ராஜபாளையத்தில் 1,97,510 டன்கள். கரூருக்குப் பக்கத்தில் உள்ள பகுதியில் 4 லட்சம் டன்கள். இப்போது அரசினர் சார்பாக சோழபுரத்தில் ஆரம்பிக்க இருக்கிற இடத்தில் 4 லட்சம் டன்கள் திறனுடையதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்த வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆசிரியர்களின் ஓய்வூதிய விதிகள்.

***128 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சர்க்கார் பாடசாலைகளில் வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கும் ஸ்தல ஸ்தாபன பாடசாலைகளில் வேலை செய்யும் உபாத்தியாயர்களுக்கும் பென்ஷன் கொடுக்கும் விஷயத்தில் கடைப்பிடிக்கும் விதிகளில் வேறு பாடு உள்ளதா ?